## பெல்மடுல்ல பிரதேச சபை
## இரத்தினபுரி மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 27 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்தெம்பர் 24 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பெல்மடுல்ல பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 01 இன் 21 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய அட்டவணை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டின் போது குத்தகைத் தவணைப்பணம் செலுத்துவதன் கீழ் கைப்பற்றப்பட்ட கெப் வாகனத்திற்குரியதாகச் செலுத்தப்பட்ட ரூபா 5,955,357 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கும் போது 2013 ஆம் ஆண்டின் கணக்குகளிலும் மீண்டும் மேற்கூறப்பட்ட வாகனத்தின் உள்ளபடியான பெறுமதியான ரூபா 6,670,000 தொகை மூலதனமாக்கப்பட்டிருந்தது. அதனால் மோட்டார் வாகனமும் வண்டியும் கணக்கு மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதி ரூபா 5,955,357 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும். மேற்கூறப்பட்ட வாகனத்திற்குரிய 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான குத்தகை, நிறுவனத்திற்குச் செலுத்தவேண்டிய வட்டியான ரூபா 701,462 தொகை மற்றும் பெறுமதி சேர் வரி பெறுமதியான ரூபா 409,422 தொகை இனங்காணப்பட்டிருந்த போதிலும் அது கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட மீளாய்வாண்டிற்குரிய ரூபா 251,946 கூட்டுத்தொகையான செலவினத்திற்காக கடன்கொடுத்தோர் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்படாமையினால் மீளாய்வாண்டின் செலவினம் அப்பொறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் உள்ளபடியான நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 1,032,166 ஆக இருந்ததுடன் அதில் நிலுவை வருமானமாக ரூபா 615,916 தொகை இனங்காணப்பட்டிருக்கும் போது மீளாய்வாண்டின் நீதிமன்றத் தண்டப் பணம் பற்றுச் சீட்டிடப்பட்ட வருமானமாக ரூபா 2,500,000 தொகை காண்பிக்கப்பட்டு அந்த வருமானம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்கவேண்டிய வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் நீதிமன்றத் தண்டப் பண வருமானம் ரூபா 1,467,834 தொகை மற்றும் ஆண்டின் இறுதியில் கடன்பட்டோர் மீதி ரூபா 1,884,084 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

07 கணக்கு விடயங்களுக்குரிய 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் ரூபா 23,514,801 கூட்டுத்தொகையாக இருந்ததுடன் உபயோகப் பதிவேடுகளின் படி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 11,521,282 ஆனமையால் வேறுபாடு ரூபா 11,993,519 ஆக இருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பொதுக் களஞ்சியக் கணக்கு மற்றும் பிரீமிக்ஸ் செயற்திட்ட பொதுக் களஞ்சியக் கணக்கின் பிரகாரம் ரூபா 480,930 தொகையான சொத்து மீதியொன்று ஐந்தொகையில் நீண்ட காலரீதியாகக் காண்பிக்கப்பட்ட போதிலும் அது தொடர்பாக பௌதீக மீதியொன்றை இனங்காண்பதற்காக எவ்வித பதிவேடும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாண இலக்கம் 371(2) | 05 சந்தர்ப்பங்களில் பல்வேறு செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 93,000 தொகையான முற்பணம் கணக்காய்வுத் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாண இலக்கம் 502 மற்றும் 11 ஆம் பிரிவு | ரூபா 38,111,235 பெறுமதியுடைய நிலையான சொத்து மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக விபரமான நிலையான சொத்துப்பதிவேடொன்று காணப்படவில்லை. |
| (iii) நிதிப்பிரமாண இலக்கம் 570 மற்றும் 571 | வைப்புப் பதிவேட்டின் பிரகாரம் 2007 ஆம் ஆண்டு முதல் 06 மாதங்களை விஞ்சிய ரூபா 2,680,074 தொகையான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**1.3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலவினத் தலைப்பு 101 இன் கீழ் ஒதுக்கப்பட்ட ரூபா 7,596,600 தொகையான நிதி ஏற்பாட்டை விஞ்சி ரூபா 1,861,461 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) விடயப் பொறுப்பு அமைச்சரின் எவ்வித முன் அங்கீகாரமும் இன்றி 2013 மார்ச் 21 ஆந் திகதிய சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் தவணை முறையில் அறவிடும் அடிப்படையில் ஒரு உறுப்பினருக்கு ரூபா 12,000 வீதம் 12 உறுப்பினர்களுக்காக ரூபா 144,000 தொகை விழா முற்பணமாக சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,077,172 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 341,861 ஆக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதிச் செயற்பாடுகளின் மிகை 507 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் ஆதனவரி மற்றும் ஏனைய வருமானங்களின் அதிகரிப்பு அதற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| வீதவரியும் வரியும் | 3,304 | 3,679 | 5,627 |
| வாடகை | 1,791 | 1,705 | 1,738 |

| | | | |
|---|---|---|---|
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,342 | 1,275 | 4 |
| ஏனைய வருமானம் | 11,653 | 12,012 | 9,950 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

காணப்படுகின்ற வருமான மூலங்களை விருத்தி செய்வதற்கும் புதிய வருமானங்களை இனங்காண்பதற்கும், பொருத்தமான வேலைத் திட்டமொன்று சபையிடம் காணப்படாமையினால் வருமான சேகரித்தல் தொடர்பாக உத்தியோகத்தர்கள் தொடர்பில் காணப்படுகின்ற மேற்பார்வை நலிவுகளின் காரணமாக சபையின் வருமான நிலையினை முன்னேற்றும் வகையில் காணப்பட்ட சந்தர்ப்பங்கள் சபையினால் தவறவிடப்பட்டிருந்தது.

### 2.3.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

(அ) 2013 சனவரி, ஆகஸ்ட், செப்தெம்பர் மற்றும் ஒக்தோபர் மாதங்களிற்காக நீதிமன்றத் தண்டப்பணமாக இரத்தினபுரி நீதவான் நீதிமன்றத்தின் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தில் 111 கிராம சேவகர் பிரிவுகளுக்காக ரூபா 28,833 தொகை மாத்திரம் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அந்த ஆண்டின் எஞ்சிய 08 மாதங்களிற்காக மேற்கூறப்பட்ட நீதிமன்ற அதிகார பிரதேசத்திற்குரிய எவ்வித நீதிமன்றத் தண்டபண வருமானமும் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபைக்கு காணிப்பதிவாளர் நாயகத்தின் மூலம் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் 2012 நவம்பர் முதல் 2013 மார்ச் வரை ரூபா 3,680,559 தொகை கிடைத்திருந்த போதிலும் 2013 மார்ச் மாதத்தின் பின்னர் பிரதேச சபைக்கு உரித்தாக வேண்டிய முத்திரைக் கட்டணத்தை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 ஆதன வரி

முன்னைய பல வருடங்களுக்குரிய ஆதனவரி அறவிட வேண்டிய அலகுகள் 5,246 இலிருந்து ரூபா 3,173,395 தொகையான நிலுவை வாடகைத் தொகை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 ஏக்கர் வரி

நிரந்தர அல்லது சட்டரீதியாக விவசாயத்திற்கு உரித்தான காணியிலிருந்து ஏக்கர் வரி அறவிட வேண்டிய போதிலும் 01 வருடம் முதல் 04 வருடங்களுக்கு மேற்பட்ட கால எல்லைக்குரிய 118 அலகுகளிலிருந்து ரூபா 55,055 தொகையான நிலுவை ஏக்கர் வரி 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.6 தொழிற் தகைமைக் கட்டணம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் நடாத்தப்படுகின்ற அட்டவணைப்படுத்தப்பட்ட 20 தொழிற்தகைமையாளர்களுக்குரிய ரூபா 900 முதல் ரூபா 3,000 வரை கட்டணம் அறவிட வேண்டியிருந்தமை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 152 (2)

ஆம் உப ரிவிவின் பிரகாரமும் இலங்கை குடியரசின் 2013 திசெம்பர் 20 ஆந் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் பிரகாரமும் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அவ்வாறான கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.7 கடை வாடகை

உள்ளூராட்சி ஆணையாளரின் 2009 மார்ச் 09 ஆந் திகதிய 2009/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி கடைகளை வாடகைக்கு வழங்கும் போது உரிய வாடகை உடன்படிக்யை வருடாந்தம் புதுப்பிப்பதற்கும், அந்த வாடகைப் பணத்தை ஆகக் குறைந்தது 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடும் செய்யப்பட வேண்டும். கடைகளை வாடகைக்கு வழங்கும் போது அவ்வாறு வருடாந்தம் உடன்படிக்கை புதுபிக்கப்படாதிருந்ததுடன் கடைகளில் 04 வாடகையாளர்களிடமிருந்து ரூபா 129,589 தொகையான நிலுவை கடை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.8 தொலைபேசிக் கோபுரக் கட்டணம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட தொலைபேசிக் கோபுரங்கள் தொடர்பாக இலங்கை குடியரசின் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதியில் அதிவிசேஷட வர்த்தமானி அறிவித்தலின் V ஆவது பட்டோலையின் ஏற்பாடுகளின் படி கட்டணம் அறவிட வேண்டியிருந்த போதிலும் அதிகாரப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட தொலைபேசிக் கோபுரங்களுக்கான கட்டண அறவிடல்கள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் அதிகாரப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட தொலைபேசிக் கோபுரங்கள் தொடர்பான எவ்வித தகவல்களும் சபையிடம் காணப்படவில்லை.

### 2.3.9 வியாபார வரி

சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள கைத்தொழில், வியாபாரங்கள் மற்றும் வியாபார அனுமதிப்பத்திர வரி அறவிட வேண்டிய தொழில் முயற்சிகளை இனங்காணும் வகையில் வருடாந்த மெய்மையாய்வொன்று கணக்காய்வுத் திகதியான 2014 மார்ச் 27 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் வரிகளுக்குரிய வருமானப் பதிவேடு சபைக்கு சேர்கின்ற வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு மாத்திரம் பேணப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் பெல்மதுல்ல நகரம் மற்றும் கஹவத்த நகரத்தின் பகுதியும் உள்ளடங்கி விரிவுபடுத்தும் நிலப் பிரதேசத்தில் அமைந்துள்ள இந்த பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற சகல வியாபார நிலையங்களிலிருந்தும் வியாபார வரிகளை அறவீடு செய்யும் வகையில் சிறந்த வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.10 அறிவித்தல் பதாதைக் கட்டணம்

சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட உப விதியான 1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிவிஷேட வர்ததமானியின் IV (ஆ) பகுதியின் பிரகாரம் அறிவித்தல் பதாதைக்கான அங்கீகாரம் சபையின் மூலம் பெறப்பட வேண்டியிருந்ததுடன் சபையினால் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரசுரிக்கப்பட்ட முறையில் அதற்குரிய கட்டணமும் அறவிடப்பட வேண்டும். சபை அதிகாரப் பிரதேசத்தில் அறிவித்தல் மற்றும் பெனர்கள் கணிசமான அளவில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை 2013 மார்ச் 27 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டதுடன் அவை எல்லாவற்றிக்கும் கட்டணம் அறவிடப்படாதிருந்தமையும் உரிய தரப்பினர் அலுவலகத்திற்கு வருகை தந்து கொடுப்பனவுகளை அறவிடல் அவர்களிடமிருந்து அக்கட்டணத்தை அறவிடும் வகையில் சிறப்பான வேலைத்திட்டமொன்று சபை வசம் காணப்படாதிருந்தமையும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. மேலும், அறிவித்தல் பதிவேடொன்று சபையினால் பேணப்படாதிருந்தமையினால் அறிவித்தல் மற்றும் பெனர்களை காட்சிப்படுத்துவதற்காக சபையினால் அறவிடப்படுகின்ற கட்டணம் தொடர்பாக போதியளவானதும் சரியானதுமான தகவல்கள் சபையிடம் காணப்படவில்லை.

**2.3.11 வாராந்த சந்தை வாடகை**

---

சபைக்குரிய வாராந்த சந்தை வாடகை ஒவ்வொரு சனிக்கிழமை தினங்களிலும் நடாத்தப்படுவதுடன் உரிய கடைகளிலிருந்து வருமான உத்தியோகத்தர்களினால் ரூபா 30 முதல் ரூபா 130 வரையிலான கட்டணம் அறவிடப்படுகின்றது. வருமான உத்தியோகத்தர்களினால் கையேற்கப்படுகின்ற பணம் வங்கிலிடப்படாமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களினால் மேற்பார்வை செய்யப்பட்டமைக்கான எவ்வித தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**2.3.12 கேளிக்கை வரி**

---

சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள கன்கந்த சினிமா மண்டபத்தின் மூலம் 2013 ஆம் ஆண்டிற்காக ரூபா 30,058 தொகையான களியாட்ட வரி வருமானமொன்று கிடைத்திருந்தது. சபையினால் முத்திரையிடப்பட்ட நுழைவுச் சீட்டுக்கள் உரிய இடத்தில் விற்பனை செய்யப்படாதிருந்தமையும், சினிமா மண்டபத்தின் மூலம் களியாட்ட வரி அறவிடல் மிகவும் மோசடியாக மேற்கொள்ளப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக வாடகை அடிப்படையில் பெறப்பட்ட பெகோ இயந்திரமொன்றை ஈடுபடுத்தி கழிவுக் குழிகளை வெட்டி அதற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2014 மார்ச் 27 ஆந் திகதி பௌதீக பரிசோதனைக்கு உட்பட்ட திகதி முதல் அதே முறையில் அழுக்குக் குழியொன்று வெட்டப்பட்டிருந்த போதிலும் இயந்திரத்தின் மாணி வாசிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் சபையின் உத்தியோகத்தர்ரொருவர் அந்த இடத்தில் நிறுத்தப்பட்டிருக்கவில்லை. அதனால் 2013 ஆம் ஆண்டில் 93 நாட்களுக்காக பெகோ இயந்திரத்தின் வேலை மணித்தியாலம் 297 இற்காகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததாக உறுதிச்சீட்டு தயாரிக்கப்பட்டு ரூபா 724,490 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது கேள்விக்குரியதாக இருந்தது.

(ஆ) பீடீ 7614 ஆம் இலக்க கெப் வாகனம் 2013 மே 20 ஆந் திகதி ஏற்பட்ட விபத்தின் பின்னர் தனியார் நிறுவனமொன்றின் மூலம் ரூபா 589,759 தொகை செலுத்தி பழுதுபார்த்தலொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. காப்புறுதி இழப்பீடாக ரூபா 561,532 தொகை மீளளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 28,227 தொகை சபை நிதியத்திலிருந்து செய்யப்பட்டிருந்தது. விபத்திற்குப் பொறுப்பானவர்களை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் சபை நிதியத்திலிருந்து செய்யப்பட்ட ரூபா 28,227 தொகை தொடர்பாக நேரடியாக சபை நிதியத்திற்கு செலவினப்பொறுப்பொன்று ஏற்பட்டிருந்தது.

(இ) சபை அலுவலகப் பிரதேசத்தில் பாரியளவில் முச்சக்கர வண்டித் தரிப்பிடங்கள் காணப்பட்ட போதும் அதற்கான வசதிகளை வழங்கியதன் பின்னர் உப விதிகளை

விதித்து மாதாந்தம் அல்லது வருடாந்தம் வருமானமொன்றைப் பெற்றுக்கொள்ளும் வேலைத்திட்டமொன்று சபையிடம் காணப்படவில்லை.

(ஈ) சபையின் கட்டுப்பாட்டில் காணப்பட்ட பெல்மதுல்ல மற்றும் பாதகட நூலகங்களில் கணக்காய்வுத் திகதியான 2014 மார்ச் 26 ஆந் திகதி வரையில் ரூபா 107,861 பெறுமதியான 1129 புத்தகங்களில் பற்றாக்குறையொன்று காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகின்ற களஞ்சிய இருப்புக்கள், பொதுக் களஞ்சியக் கணக்கின் மூலம் கணக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்களின் போது செலவினத் தலைப்பில் வரவு வைத்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆண்டின் இறுதியில் இருப்புக் கணக்கின் மூலம் அவதானிக்கப்படாதிருந்ததுடன் கொள்வனவு செய்யப்பட்ட முழுமையான இருப்பும் பயன்படுத்தல்களாக கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாண இலக்கம் 182(2), 187(3) மற்றும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதி 3 இன் பிரகாரம் சபைக்குரிய மாறப்பன உப அலுவலகத்தின் மூலம் 2003 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளுக்குரிய வங்கியிலிடப்பட வேண்டிய ரூபா 8,915 பணம் வங்கியிலிடப்படாமை தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, 2004 ஆம் ஆண்டிற்குரிய கணக்கீடு செய்யப்படாத ரூபா 517,448 தொகையான பணம் மற்றும் நேரடி அனுப்புதல்கள் தொடர்பாகவும் கணக்காய்வின் போது தொடர்ச்சியாக சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தும் அது தொடர்பாகவும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) சபையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்ற பதவியணியினர்களுக்கு விநியோகிக்கப்பட்ட ரூபா 149,133 தொகையான நிலுவை ஊழியர் கடன் மீதி கணக்காய்வுத் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்குரிய பீடி 7614 ஆம் இலக்க கெப் வண்டிக்கான ஓட்ட அட்டவணையில் மைலோ மீற்றரில் குறிப்பிடப்பட்ட கிலோ மீற்றர் எண்ணிக்கை உள்ளடக்கப்படாது சாரதியின் சுய மதிப்பீட்டின் அடிப்படையில் எரிபொருள் சமப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே 3 மாதங்களுக்கு ஒரு தடவை எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2013 ஆம் ஆண்டு முழுவதும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 624,041 பெறுமதியான 5,199 லீற்றர் எரிபொருள் பெறப்பட்டிருந்தும் உள்ளபடியான தேவை எவ்வளவு என கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை.

(ஆ) 2013 பெப்ரவரி 26 ஆந் திகதி முதல் 2013 மார்ச் 03 ஆந் திகதி வரை தாய்லாந்து சுற்றுலாவிற்காக ஆறு உறுப்பினர்களுக்கு ரூபா 540,000 தொகையான செலவினமொன்று சபை நிதியிலிருந்து செலவிடப்பட்டிருந்தது. இதற்காக உள்ளூராட்சி

விடய பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் கிடைத்திருந்தமை சப்ரகமுவ உள்ளூராட்சி ஆணையாளரின் 2013 பெப்ரவரி 13 ஆந் திகதி சீஎல்சீ/436(1) ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த சுற்றுலா தொடர்பாக மேலும் பின்வரும் விடயங்களும் அவதானிக்கப்பட்டன.

(i) வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான தகவல்கள் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(ii) உள்ளூராட்சி நிறுவனங்களின் நிதியம் அரசாங்க கொள்கைளுக்கு முரணாக ஈடுபடுத்த முடியாதிருந்தமை ''உள்ளூராட்சி தலைவர், முகவரொருவர் அல்லது உறுப்பினரொருவர் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டால் உரிய அமைப்பு அல்லது வெளிநாட்டு நிறுவனத்தால் அதற்காக செலவாகின்ற சகல செலவினங்கள் மற்றும் வசதிகள் செய்யப்பட வேண்டும்'' என உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சுச் செயலாளரினால் நாட்டின் சகல பிரதம செயலாளர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

வெளிநாட்டு பயிற்சியின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவை உள்நாட்டு ரீதியாக பயன்படுத்திக்கொள்ளும் முறை தொடர்பான அறிக்கையொன்று பயிற்சி முடிவடைந்து ஒரு மாதத்திற்குள் வழங்கப்பட வேண்டிய போதிலும் அது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) வெளிநாட்டு சுற்றுலாவிற்காக பங்குபற்றுகின்றவர்கள் நாட்டிலிருந்து வெளியே செல்வதற்காக கௌரவ ஆளுனரின் அனுமதி பெறவேண்டியிருந்த போதிலும் அந்த அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், அதன் போது செலவிடப்பட்ட பிரயாணச் செலவினம், விமான நிலையக் கட்டணம், வீசாக் கட்டணம் போன்றவற்றினைத் தீர்த்து கொள்வதற்காக ஒரு நாளைக்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 50 படி ஆகக் கூடியது 15 நாட்களுக்காக செலுத்த முடியுமாக இருந்த போதிலும் தாய்லாந்து சுற்றுலாவிற்கான செலவினமாக தனியார் நிறுவனமொன்றிக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 540,000 தொகை சபை நிதியிலிருந்து செலுத்தியிருக்கும் போது மீண்டும் ஆறு உறுப்பினர்களுக்காக ஒரு உறுப்பினருக்கு ஒரு நாளைக்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 50 படி 300 டொலர்களின் கூட்டுத்தொகையான ஐக்கிய அமெரிக்க டொலர் 1,800 அதாவது இலங்கை ரூபா 230,382 தொகை சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

**3.4 ஒப்பந்த நிர்வாகம்**

(அ) கெஹெல்பத்தர வாய்க்கால் ஊடாக பக்கச் சுவர் பாலமொன்றை நிர்ணயிப்பதற்குரிய மற்றும் கோணகும்பர சமுர்த்தி சங்கத்துடன் 2011 திசெம்பர் 22 அந் திகதி ரூபா 883,743 தொகைக்கும், 2012 பெப்ரவரி 22 ஆந் திகதி இரண்டாவது தடவையாக ரூபா 419,231 பெறுமதியுடைய 02 உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்தன. மேற்கூறப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாணங்கள் திருப்திகரமாக பூர்த்தி செய்யப்பட்டதாக தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் சிபாரிசுகளின் அடிப்படையில் நிறுத்தி வைத்தல் பணம் கழிக்கப்பட்டதன் பின்னர் 2012 ஆம் ஆண்டின் போது 02 சந்தர்ப்பங்களில் ரூபா 836,667 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

மேலும், இந்த நிர்மாணங்களுக்குரிய நிறுத்தி வைத்தல் பணம் மற்றும் உடன்படிக்கை பிணையாக ரூபா 158,113 தொகை உரிய சங்கத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

இந்தப் பாலம் நீர் வழி ஊடாக கட்டொன்றை கட்டி ஹியூம் குழாய் ஈடுபடுத்தப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் நீர் அலைகளுக்கு கழுவிச் செல்லாமல் ஈடுபடுத்தப்பட்ட ஹியூம் குழாய் போதியளவில் இல்லாதிருந்தமையும், நீருடன் அடித்து வரப்படுகின்ற மரப் பகுதி போன்றவை மூலம் ஹியூம் குழாய் நெருக்கடிக்குள்ளாகின்றமையும் நுகர்வுக்கான நீர் வழியூடாக நிர்மாணிக்கப்பட்ட கட்டின் மூலம் நீர் வழி நெருக்கடிக்குள்கின்றமையின் காரணமாக அந்த இடத்தில் உள்ள நீர் தொற்றுக்களுக்கு உட்படுகின்றமையினால் நீர் வழிந்தோடும் இயற்கையான பிரயாண வழி மாற்றமடைந்து நிர்மாணிக்கப்பட்ட பாலத்துடன் வாய்க்கால் வீதியின் இவுறு பிந்திகொல் அருகில் காணியொன்றிற்கு ஊடாக நீர் வழிந்தோடுவதனால் பாரியளவில் சுற்றாடல் பாதிப்பிற்கு உள்ளாகியிருந்தமை 2014 மார்ச் 27 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) பிரதேச சபையின் சுற்றாடல் பாதுகாப்பு (கழிவுப் பொருள் முகாமைத்துவம்) நிலையத்தை நிர்மாணிப்பதற்காக முதலாவது கட்டமாக ரூபா 8.357,103 தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட நிர்மாணத்திற்காக கூறுவிலை கோரப்பட்டு தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரினால் உடன்படிக்கையின்படி நடவடிக்கை எடுக்காது ஒப்பந்தம் கைவிடப்பட்டமையால் அந்த ஒப்பந்தக்காரருடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு ஒப்பந்தத்தை சபைக்கு கையளிப்பதற்கு கொள்வனவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டு ரூபா 8,357,102 தொகை வேலை செலவினங்களின் அடிப்படையில் ஒப்பந்தம் கொள்வனவு வழிகாட்டிக் கோவை பின்பற்றப்பட்டு 2012 திசெம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்வதற்கு 2012 ஒக்தோபர் 08 ஆந் திகதிய சீஎம்/டீஈ/03 ஆம் இலக்க பிரதம அமைச்சுச் செயலாளரின் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இருந்த போதிலும் 2012 ஒக்தோபர் 12 ஆந் திகதி சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் நிர்மாண நடவடிக்கைகள் வரையறுக்கப்பட்ட கூறு விலைகள் கோருவதற்கு உள்ளுராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. வரையறுத்த கூறுவிலைகள் கோரி தனியார் ஒப்பந்தக்காரருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு 06 மாதங்களுக்குள் வேலை பூர்த்தியாக்கப்பட்டு கையளிப்பதற்காக 2012 நவம்பர் 22 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும் 2014 மார்ச் 27 ஆந் திகதி சபையின் உத்தியோகத்தர்களுடன் கணக்காய்வு உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) கழிவுப் பொருள் முகாமைத்துவ வெயற்திட்ட நிலையத்திற்காக தொழில்நுட்ப உத்தியோகத்தரின் சிபாரிசின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ரூபா 5,929,590 தொகையான பட்டியல் 2014 மார்ச் 27 ஆந் திகதியளவில் பிரதம அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 4,843,575 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்துடன் இதன் பின்னர் ஒப்பந்தத்தின் வேலை நிறுத்தப்பட்டிருந்தது. ரூபா 1,031,402 கூட்டுத்தொகையான செலவினத்தில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட ஊழியர் ஓய்வறை மற்றும் பாதுகாப்புக் கூடாரம் என்பவற்றின் வேலை அனேகமாக பூர்த்தி செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்ட போதிலும் ரூபா 425,471 செலவினத்தில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட அரசாங்க கட்டிடத்தின் நிர்மாணங்கள் எதுவும் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.5 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

ரூபா 4,843,575 செலவில் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தின் ஒரு பகுதி நிர்மானிக்கப்பட்டிருந்ததுடன் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அகற்றப்படுகின்ற கழிவுப் பொருட்கள் இந்தப் பகுதிக்கு கொண்டு வந்து குவிக்கப்பட்டு துர்நாற்றத்துடன் காணப்பட்டது. அதற்குப் மேலதிகமாக இந்த இடத்தில் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 724,490 தொகை செலவில் பெகோ இயந்திரத்தின் மூலம் கழிவுப் பொருள் குழிகள் வெட்டப்பட்டு கழிவுப்பொருட்கள் குழிகளுக்குள் போடப்பட்டிருந்தன. நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்ற கட்டிடத்தின் வளவில் புற்கள் வளர்ந்திருந்தமையும் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்ற 02 தாங்கிகள் அசுத்தமான நீர் நிரம்பி நாற்றத்துடன் காணப்பட்டமையும், டெங்கு போன்ற உயிர் கொல்லி நுளம்புக் குஞ்சுகள் பெருகி பரவக் கூடிய நோய்கள் பெருகக் கூடிய சந்தர்ப்பம் காணப்படுகின்றமையும், கொங்கீரீட் தளம் நிர்மாணிக்கப்படுகின்ற சூழலின் அருகில் கழிவுப் பொருட்கள் உயிரினங்களினால் காவிச் செல்லப்பட்டு பிரதேசத்தில் கழிவுப்பொருள் பரவி மிகவும் துர்நாற்றத்துடன் காணப்படுகின்றமையும், கழிவுப் பொருட்கள் கழிவுப் பொருள் குழிக்குள் இட்டு மூடப்படுகின்றமையால் உக்குகின்ற மற்றும் உக்காத சகல கழிவுப் பொருட்களும் குழிக்குள் போடப்பட்டு உக்காத கழிவுப் பொருட்கள் நிலையத்திற்குள் அகப்பட்டு பாரிய சுற்றாடல் தாக்கத்தை ஏற்படுத்துகின்றமையும் 2014 மார்ச் 27 ஆந் திகதி மெற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் 5(7) இன் பிகாரம் நிதி மற்றும் களஞ்சியம் தொடர்பாக போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குடிநீர் செயற்திட்டம் (மாறப்பன ரஜனாஎல்ல, கிரிந்திஎல்ல) மற்றும் புதிய சந்தைத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,000,000 தொகை மற்றும் ரூபா 55,000,000 படி ரூபா 56,000,000 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், உரிய செயற்திட்டம் மீளாய்வாண்டின் போது அமுல்படுத்துவதற்கு அல்லது திட்டமிடுவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) 17 செலவின விடயங்களுக்குரியதாக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் ரூபா 8,349,873 தொகை மீளாய்வாண்டின் இறுதியின் போதும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) ஒப்பந்த நிருவாகம்
(உ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்